[1974 ஏப்ரல் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) வடாற்காடு மாவட்டத்திலுள்ள பீடித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. ஆர் மாரிமுத்து, எம்.ஏ. லத்தீப் ஆகிய மூவரும் சேர்ந்து

the serious situation arising out of the strike of 40,000 beedi workers in North Arcot district, affecting the economy of the district

என்ற பொருள் பற்றி விவாதிக்க, சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு எப்படி முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை இது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பீடித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் குறித்து

திரு. கே. டி. கே. தங்கமணி: அவைத் தலைவரவர்களே, நாங்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்த நேரத்தில் வடாற்காடு மாவட்டத்திலுள்ள சுமார் 40,000 பீடித் தொழிலாளர்கள் மட்டும்தான் வேலைநிறுத்தம் செய்தார்கள். இப்போது கிட்டத்தட்ட மாநிலம் பூராவிலுமுள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை

1974 ஏப்ரல் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நிறுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, திருச்சி மாவட்டத்தில் பரிபூரணமாக வேலை நிறுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு அவர்கள் ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். ஏற்கெனவே ஒரு சமயத்தில் வேலை நிறுத்தம் செய்து, அதன் காரணமாக குறைந்தபட்ச சம்பளம் நிச்சயம் செய்ய ஒரு கமிட்டி போட்டு அந்தக் கமிட்டி ஆயிரம் பீடிக்கு ரூ. 3.50 என்று நிர்ணயம் செய்திருந்தது. அப்போதே பல தொழிற்சங்கங்கள் மத்திய சங்கங்கள் எல்லாம் அமைச்சர்களிடம் வந்து, போதாது என்று முறையிட்டார்கள். நம்முடைய மாநிலத்திற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய கேரளத்தில் இதைவிட ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் அதிகமாக இருக்கிறது. தமிழ்நாட்டிலே கூட சேலம் மாவட்டத்தில் அதிகமாகக் கொடுக்கிறார்கள். மைசூர் மாநிலத்திலும் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அதனால் இந்தக் குறைந்த சம்பளத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டார்கள்.

இப்போது பேச்சு வார்த்தை நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். அது தொடர்ந்து நடைபெற்று, சுமுகமான முடிவு ஏற்படும் என்று தெளிவாகச் சொல்வதற்கில்லை. நேற்றுகூட தமிழ் நாடு பூராவிலும் இருந்து 2,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஊர்வலமாக வந்து கமிஷனரைப் பார்த்திருக்கிறார்கள். இது அவர்களுக்கு மிகவும் கஷ்டமான ஒரு நிலைமையாக இருக்கிறது. வடஆற்காடு மாவட்டத்தில் முக்கியமாக இந்தத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் கடந்த 10 நாட்களுக்கு மேல் நடந்துகொண்டிருக்கிறது. அந்த வேலை நிறுத்தத்தை நிறுத்துவதற்கு எந்தவிதமான துரித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பீடி முதலாளிகள் மாதிரி பிடிவாதம் பிடித்த முதலாளிகள் வேறு எங்கும் இருக்க முடியாது. அரசாங்கம் பேச்சு வார்த்தைக்கு அழைத்தாலும் அவர்கள் வருவது கிடையாது. இப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஆகையால் அவர்கள்மீது ஒரு கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

லட்சக்கணக்கான தொழிலாளர்கள் நலன் பெரிதா அல்லது 100 முதலாளிகளின் தயவுதான் பெரிதா என்பதை அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். இது இப்போது ஒரு முக்கியப் பிரச்சனையாக

எழுந்திருக்கிறது. சமுதாயத்தில் பீடித் தொழிலாளர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய வருமானம் மிகவும் குறைவு. நிம்மதியற்ற வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நான் அவர்களைக் குறைந்த பட்ச சம்பளம் பெறும் தொழிலாளர்கள் பட்டியலில் சேர்த்திருக்கிறோம்.

அவர்களுக்குத் தற்போது பாதுகாப்பு இல்லை. அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பைக் கொடுப்பதற்கும் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயம் செய்வதற்கும், வேலை நிறுத்தத்திற்கு ஒரு முடிவு ஏற்படுவதற்கும் பரிகாரம் காணும் வகையில், இது ஒரு முக்கியமான பிரச்சனையாக இருப்பதால் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்த விஷயத்தை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டிலே மிகக் குறைந்த ஊதியம் பெற்று வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்கள் பீடித் தொழிலாளர்கள். அவர்கள் இப்போது ஒரு பெரிய போராட்டத்தில் இறங்கி இருக்கிறார்கள். இப்போதுதான் இந்தப் போராட்டம் நடைபெறுகிறதா என்றால் இல்லை. கடந்த பல ஆண்டுகளாகவே வாழ்க்கைக்குப் போதுமான ஊதியம் வேண்டுமென்று நாடு பூராவும் கிளர்ச்சிகள் செய்து, கூட்டங்கள் போட்டு, தீர்மானங்கள் போட்டு, போராட்டங்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

இன்றைய தினம் விலைவாசி ஏறியிருக்கக்கூடிய நிலையில் மிகக் குறைந்த ஊதியம் பெற்று வந்தவர்கள், போதாது என்று போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். அதனால் அவர்கள் நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது. போராட்ட காலத்தில் எந்தவிதமான ஊதியமும் கிடையாது. லட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். இந்த நிலை நீடித்துக்கொண்டிருந்தால் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பங்களும் பாதிக்கப்படும். ஆகையால் அரசாங்கம் தலையிட்டு இதற்கு ஒரு நிரந்தர பரிகாரம் காண ஏற்பாடு செய்ய வேண்டும்.

1974 ஏப்ரல் 17] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இதில் ஒருகாலத்திலும் நிரந்தரமான ஏற்பாடு செய்ய முடியாது என்று நினைக்கிறேன். இப்போது பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன. இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. சின்னச் சின்ன அளவிலே தொழில் நடத்திக்கொண்டிருக்கிற சில முதலாளிகளும் இருக்கிறார்கள்; பெரும் முதலாளிகளும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்து ஒரு முடிவு எடுப்பதில் சிரமங்கள் இருக்கலாம். இருந்தாலும் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் பிரச்சனையாக இது இருப்பதால், அரசாங்கம் இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தி, முடிவு செய்ய வேண்டும். நியாயமான கூலி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். இது ஒரு முக்கியமான பிரச்சனையாக இருப்பதால் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, கடந்த 9—4—1974 முதல் தமிழ்நாடு பூராவும் இருக்கின்ற பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். சாதாரணமாக, ஒரு நாளைக்குக் கூலி பெற்றால்தான் வாழ்க்கை நடத்த முடியும் என்ற நிலையில் இருப்பவர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால் அவர்கள் எந்தவிதமான கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ்நாடு முழுவதும் உள்ள பீடித் தொழிலாளர்கள் சுமார் 2½ லட்சம் பேர் இன்றைக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். 2½ லட்சம் தொழிலாளர்கள் என்றால் அவர்களை நம்பி இருக்கின்ற அவர்கள் குடும்பத்தினர் 8 லட்சம் பேர் இருப்பார்கள். அவர்கள் அத்தனை பேர்களும் பட்டினி கிடக்கக்கூடிய ஒரு பரிதாபகரமான நிலைமை உருவாகி இருக்கிறது.

பீடித் தொழிலாளர்களில் பலர் இன்றைக்குக் கூட சென்னைக்கு வந்து அவர்கள் கோரிக்கைகளுக்கு ஒரு நல்ல முடிவு ஏற்பட வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது வரை எந்த விதமான நியாயமும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

பீடி முதலாளிகள் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கிறார்களா என்பதை முதலில் பார்த்துக் கொள்வோம் என்று அரசாங்கம் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாது.

அவர்கள் பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்ற அளவிலேயே காலத்தை நீட்டிக் கொண்டு போவார்கள். முடிவு ஏற்படும் சாத்தியக் கூறுகள் உருவாகாது. அப்படிக் காலம் நீண்டு கொண்டே போனால் சுமார் 10 லட்சம் மக்கள் பட்டினி கிடந்து சாவார்கள்; அமைதி கெடும்; ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாகும்.

1966-ம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழில் சட்டம் இருக்கிறது. இதை இதுவரை அமுல்படுத்தவில்லை. அதுபற்றி ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டும் ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. இருந்த போதிலும் அதை அமுல்படுத்த பீடி முதலாளிகள் முன்வரவில்லை. இன்றைக்கு ஆயிரம் பீடிக்கு 3½ ரூபாய் கூலி கொடுக்கிறார்கள் என்றால் ஒரு தொழிலாளிக்கு ஒரு நாள் பூராவும் வேலை செய்தால் தான் 1,500 பீடி சுற்ற முடியும் என்றால், அதிகப்பட்சம் 6 ரூபாய் தான் சம்பாதிக்க முடியும். ஒரு குடும்பத்தில் 8 பேர், 10 பேர் இருந்தால் இந்த 6 ரூபாயைக் கொண்டு எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? அதைப்பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று சொன்னால், அதிகமாக வற்புறுத்தினால் முதலாளிகள் அண்டை மாநிலங்களுக்குத் தங்களுடைய தொழிலை மாற்றிவிடக் கூடும் என்று பதில் சொல்லப்படுகிறது. அப்படி ஒன்றும் நடக்காது. ஆகையால் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்ன மாதிரி 100 முதலாளிகளின் தயவு பெரிதா அல்லது 10 லட்சம் மக்களின் வாழ்க்கை பெரிதா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இந்தப் பிரச்சனையில் மந்த நிலை இருக்கக் கூடாது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது மிகவும் முக்கியமான ஒரு பிரச்சனை ; 10 லட்சம் மக்களின் வாழ்க்கைப் பிரச்சனை. ஆகவே இதைப்பற்றி தீவிரமாக விவாதித்து, உறுதியான நடவடிக்கை எடுப்பதற்காக சபையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இம் மாநிலத்திலுள்ள பீடி, சுருட்டு ஆகிய தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யூ.சி., சி.ஐ.டி.யூ., எல்.பி.எப்.; ஏ. டி. யூ. ஆகிய பல்வேறு தொழிற்சங்கங்களோடு இணைந்து

1974 ஏப்ரல் 17] [திரு. க. இராசாராம்]

9—4—1974 முதல் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்னிட்டு வேலை நிறுத்தம் செய்யப் போவதாக வேலை நிறுத்த அறிக்கைகள் விடுத்துள்ளனர் :—

(1) 1,000 பீடிகளைச் சுற்றுவதற்குக் குறைந்த பட்ச அடிப் படை ஊதியம் ரூ. 5.75.

1,000 சிறிய அளவு சுருட்டுகளைச் சுற்றுவதற்கு ஊதியம் ரூ. 10.

1,000 நடுத்தர அளவு சுருட்டுகளைச் சுற்றுவதற்கு ஊதியம் ரூ. 12.

1,000 பெரிய அளவு சுருட்டுகளைச் சுற்றுவதற்கு ஊதியம் ரூ. 15.

(2) தனியாக பஞ்சப்படி அளித்தல்.

(3) வாரத்தில் 6 நாட்கள் வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்வது (பீடித் தொழிலாளர்களின் கோரிக்கை) வேலையில்லாத நாட்களுக்கு ஈட்டுத் தொகை கொடுப்பது.

(4) பீடி, சுருட்டுத் தொழிலாளர்களுக்கான சட்டம் 1966 அமுலாக்குதல் (வேலை தருவதற்குரிய விதிமுறைகள்) முதலியன.

சுருட்டு: இத்தொழிற்தகராறு 8—4—1974 அன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சுருட்டு உற்பத்தித் தொழிலாளர் எழுப்பிய தகராறுபற்றி சென்னை துணைத் தொழிலாளர் நல ஆணையாளர் (ஆய்வுப் பிரிவு), உதவித் தொழிலாளர் ஆணையாளர் முன்னிலையில் நடத்திய பேச்சுவார்த்தையின் பலனாகத் தொழில் தகராறு சட்டம் 1947, 12(3) பிரிவின்கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி 1,000 சுருட்டுகள் சுருட்டு வதற்கு எந்த அளவானாலும் தற்போதுள்ள ஊதியத்திற்கு மேலாக இடைக்கால ஊதிய உயர்வாக ரூ. 1 9—4—1974 முதல் தமிழ் நாட்டில் உள்ள எல்லா இடங்களிலும் வேலை செய்யும் சுருட்டுத் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் அளிப்பதற்கு இந்த ஒப்பந்தம் வழி செய்கிறது.

[திரு. க. இராசாராம்] [1974 ஏப்ரல் 17

இந்தத் தற்காலிக நிவாரணத்தின் பயனாக சங்கங்கள் வேலை நிறுத்த அறிக்கையை வாபஸ் பெற்றுக்கொள்ள ஒப்புக் கொண்டுள்ளன. மேலும் இரு தரப்பினரும் சம்பள விகிதத் திருத்தம் பற்றி துணைத் தொழிலாளர் நல ஆணையாளர் (ஆய்வு) அவர்கள் முன்னிலையில் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் கூடிய விரைவில் நடத்துவார்கள்.

சுருட்டுத் தொழிற்சாலைகளில் இந்த ஒப்பந்தத்தின் பலனாக வேலை நிறுத்தம் நடைபெறவில்லை.

பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டம் (வேலை அளிப்பதற்கான விதிமுறைகள்) அமுலாக்குதல்: தொழில் ஆய்வாளர்கள், உதவித் தொழில் ஆய்வாளர்கள் அனைவரும் பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டம் 1966 (வேலை அளிப்பதற்கான விதி முறைகள்) அமுல்படுத்தும்படி ஏற்கனவே அறிவுறுத்தப் பட்டிருக்கின்றார்கள்.

பீடி: பீடித் தொழிற்சாலைகளில் குறைந்தபட்ச ஊதியம் ரூ. 5.75-ம் தனியாக பஞ்சப்படியும் தரப்பட வேண்டுமென்று சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. அரசு ஆணை 415, தொழிலாளர் & வேலை வாய்ப்புத் துறை தேதி 18-6-73-ல் புகையிலை பீடித் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதிய விதத்தை இவ்வரசு அறிவித்துள்ளது. அதன் விபரம் கீழ் வருமாறு:—

1,000 ஜாடி பீடிகள் எந்த அளவாயினும் சுருட்டுவதற்கான ஊதியம் ரூ. 3.50.

1,000 சாதா பீடிகள் எந்த அளவாயினும் சுருட்டுவதற்கான ஊதியம் ரூ. 3.25.

1,000 சிறிய அளவு முக்கூடல் பிரிவைச் சார்ந்த பீடிகள் சுருட்டுவதற்கான ஊதியம் ரூ. 3.25.

பெயர்ச்சீட்டு ஒட்டுவதற்கான (எந்த அளவு பெயர்ச் சீட்டு ஒட்டுவதாயினும்) ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ. 2.65 அல்லது மாதம் ஒன்றுக்கு ரூ. 68.90.

அடுத்த சம்பள விதி திருத்தம் 1-7-74 முதல் அமுல்படுத்தப் படும். இதுபற்றி நடவடிக்கை தனியாக எடுக்கப்படுகிறது.

1974 ஏப்ரல் 17] [திரு. க. இராசாராம்]

8-4-1974 அன்று நடந்த விரிவான விவாதத்திற்குப் பிறகு சங்கம் 1,000 பீடி சுருட்டுவதற்கு குறைந்த பட்சம் ரூ. 1.50 இடைக்கால நிவாரணமாக அளிக்க வேண்டுமென்று வலியுறுத்தியது. இந்தக் கோரிக்கைக்கு நிர்வாகம் கலந்து ஆலோசனை செய்ய அவகாசம் கேட்டுக் கொண்டுள்ளது. இருந்த போதிலும் பீடித் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் வேலைநிறுத்த அறிக்கையின்படி 9-4-1974 முதல் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

மேலும் இந்தத் தொழிற் தகராறு சம்பந்தமாக 16-4-1974 அன்று பேச்சுவார்த்தை நடக்கவிருந்தன. ஆனால் அன்று நடந்த பேச்சு வார்த்தைகளில் பீடி முதலாளிகள் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் வேலைநிறுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது சமரசப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்கில்லை என்று கூறி பேச்சு வார்த்தைகளை ஒத்திப் போடும்படி கூறியிருக்கிறார்கள். ஏ.ஐ.டி.யூ.சி., சி.ஐ.டி.யு., ஐ.என்.டி.யு.சி, லேபர் புரோக்கிரசிங் பெடரேஷன், அண்ணா தொழிலாளர் யூனியனைச் சேர்ந்தவர்கள் வந்திருந்தார்கள். மறுபடி பேச்சுவார்த்தை 20-4-1974 அன்று நடக்கவிருக்கிறது. பீடி முதலாளிகளையும் கலந்து கொள்ள கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, 20-ந் தேதி பேச்சு வார்த்தை தொடர்ந்து நடக்கும் என்று சொல்லுகிறார்கள். 9-4-1974-லிருந்து வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. ஒவ்வொரு நாளும் கூலி பெற்றால் தான் அவர்கள் சாப்பிட முடியும் என்ற நிலையில், முதலாளிகள் வேண்டுமென்று இதைத் தள்ளிப் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 20-ந் தேதி பேச்சு வார்த்தை நடக்கும் என்று சொல்லியிருப்பதால், அவர்களுக்கு ஒரு நாள் குறைந்தபட்சக் கூலியாவது, வேலை செய்தாலும், வேலை செய்யாவிட்டாலும், ஒவ்வொரு நாளும் கொடுக்கப்பட வேண்டுமென்று ஒரு ஆர்டினென்ஸ் போடுவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதற்கான ஆர்டினென்ஸ் போடுவதற்கு வழிவகை இருக்கிறதா என்று தெரியவில்லை. இருந்தாலும் இந்தப் பேச்சு வார்த்தையை விரைவில் முடிக்க வேண்டுமென்று நான் 3 நாட்கள் முன்னதாக வேலூருக்குப் பக்கத்தி

[திரு. க. இராசாராம்] [1974 ஏப்ரல் 17

லிருக்கிற நம் தோப்பூர் திருவேங்கடத்தின் தொகுதிக்குப் போகின்ற நேரத்தில் கூட, தொழிலாளிகளைச் சந்தித்தேன். அவர்களிடத்தில் நான் இதைப்பற்றிப் பேசி, மாவட்ட ஆட்சித் தலைவரோடு கூட அன்று கலந்து கொண்டு விரைவில் பேச்சு வார்த்தை முடிக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறேன். அதற்காக துணைத் தொழில் ஆணையாளர் அவர்கள் போயிருக்கிறார்கள். பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் அந்தப் பேச்சு வார்த்தை முடிவுறும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி விவாதிக்க பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கின்றேன்.

(ஆ) பக்கிங்காம்-கர்நாடிக் ஆலைத் தொழிலாளர்களின் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. எம். சுப்பிரமணியம், ஆர். பொன்னப்ப நாடார் ஆகிய இருவரும் சேர்ந்து

stay-in strike by Buckingham and Carnatic Mill Staff Union from 19th April 1974 on the basis of charter of demands which hampers the working of the Mills resulting in serious consequences.

என்ற பொருள் பற்றி விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு எப்படி முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை இது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைக் கொடுத்து சில நாட்களாயிற்று. இந்த இடைவேளையில் என்னென்ன நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன என்பது எல்லாம் அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும். அங்கிருக்கின்ற அந்த ஸ்டாஃப் யூனியனானது அவர்களின் சில நிபந்தனையின் அடிப்படையில் அவர்கள் உள்ளிருந்து வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.